ஞாயிறுக்கிழமைதோறும்
தினமணியுடன்...
தினமணி கதிர்
படியுங்கள்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி
புதன்கிழமை, 4 மார்ச் 2026

உடலை வளர்க்க குடலைக் கழுவு! குடலைக் கழுவி உடலை வளர்!
காந்தலாக்ஸ்
பேதி மாத்திரைகள்
மலச்சிக்கல், நீடித்த மலச்சிக்கல், மலச்சிக்கலால் வயிற்றுவலி, வயிற்று இரைச்சல், வயிற்று உப்பிசம், அஜீரணம், புளித்த ஏப்பம், அதிக உஷ்ணம், பித்தம், வாய்வு மற்றும் கீரைப்பூச்சிகள், நாக்குப் பூச்சிகளால் நச்சுப் பொருட்கள் வெளியேறி குடல் தூய்மை பெறுகிறது.
Mfrs : டாக்டர் கே.எஸ்.கே சன்ஸ் கும்பகோணம்-612 001.
போன் : (0435) 242 1196, (0435) 242 0005.
எல்லா ஊர் மருந்து கடைகளிலும் கிடைக்கும்

திருவனந்தபுரம் ஆற்றுகால் பகவதி அம்மன் கோயில் பொங்கல் விழா

பல லட்சம் பெண்கள் பங்கேற்பு

களியக்காவிளை, மார்ச் 3: கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள புகழ்பெற்ற ஆற்றுகால் பகவதி அம்மன் கோயிலில் பொங்கல் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பெண்கள் பங்கேற்று பொங்கலிட்டு அம்மனை வழிபட்டனர்.

இந்தக் கோயிலில் நிகழாண்டு திருவிழா பிப். 23-ஆம் தேதி, அம்மனை காப்புக்கட்டி குடியிருத்தும் சடங்குடன் தொடங்கியது. புகழ்பெற்ற பொங்கல் வழிபாடு செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. இதையொட்டி, சுத்த புண்ணிய ஹோம பூஜைகள், பொங்காலை அடுப்பு வெட்டு சடங்கு நடைபெற்றது. பின்னர், கண்ணகி சரிதத்தில் பாண்டிய மன்னன் வதம் குறித்த தோற்றம் பாட்டு பாடப்பட்டது.

அதையடுத்து, கோயில் தந்திரி பரமேஸ்வரன் பட்டத்திரிபாடு முன்னிலையில் கோயில் மேல் சாந்தி அனீஸ் நம்பூதிரி கோயிலிலிருந்து ஏற்றப்பட்ட தீபத்தை திடப்பள்ளி பொங்காலை அடுப்பில் ஏற்றினார். கோயிலின் முன் அமைக்கப்பட்டிருந்த பண்டார அடுப்பிலும் தீபம் ஏற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, பண்டார அடுப்பிலிருந்து பகிரப்பட்ட தீபத்தை பக்தர்கள் தங்களது பொங்காலை அடுப்பில் ஏற்றி, பொங்கலிட்டனர்.

திருவனந்தபுரம் நகரப் பகுதியில் சுமார் 25 கி.மீ. சுற்றளவில் லட்சக்கணக்கான பெண்கள் திரண்டு பொங்கல் வழிபாடு நடத்தினர். இதனால், நகர்பகுதி முழுவதும் புகைமண்டலமாகக் காட்சியளித்தது. பிற்பகலில் பொங்காலை நைவேத்யம் நடைபெற்றது. இதில், 350-க்கும் மேற்பட்ட பூசாரிகள் பங்கேற்றனர்.

புதன்கிழமை இரவு 9.45 மணிக்கு காப்பு அழிக்கும் சடங்கு, நள்ளிரவு 12.45 மணிக்கு மேல் குருதி தர்ப்பணத்துடன் விழா நிறைவடைகிறது. செவ்வாய்க்கிழமை சந்திர கிரகணம் என்பதால், பிற்பகல் 3.10 மணி முதல் இரவு 7 மணி வரை கோயில் நடை அடைக்கப்பட்டது.

விஞ்சும் சாதனைகள்: இந்தக் கோயிலில் 1997-ஆம் ஆண்டு 15 லட்சம் பெண்களும், 2009-இல் 25 லட்சம் பெண்களும் பொங்கலிட்டது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த எண்ணிக்கை சாதனை ஆண்டுதோறும் விஞ்சப்பட்டு வருகிறது.

பொங்கல் விழாவையொட்டி திருவனந்தபுரம் மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டது. கேரளம், தமிழகத்திலிருந்து பொங்கலிட வந்த பக்தர்கள் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள், ரயில்கள் இயக்கப்பட்டன. பாதுகாப்புப் பணியில் 3,000-க்கும் மேற்பட்ட போலீஸார் ஈடுபட்டனர்.

ஆற்றுகால் பகவதி அம்மன் கோயிலில் செவ்வாய்க்கிழமை பொங்கலிடுவதற்காக குவிந்த பெண்கள்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு: தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு இன்று வெளியீடு

சென்னை, மார்ச் 3: பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு புதன்கிழமை (மார்ச் 4) வெளியிடப்படவுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் பத்தாம் வகுப்புக்கான பொதுத்தேர்வு மார்ச் 11 முதல் ஏப்.6-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்தத் தேர்வை பள்ளி மாணவர்கள் 8,82,806 மற்றும் தனித்தேர்வர்கள் 26,196 என 9,9,002 பேர்எழுதவுள்ளனர். இதற்காக 4,219 தேர்வு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு புதன்கிழமை பிற்பகல் வெளியிடப்பட உள்ளது.

இதையடுத்து அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தேர்வுத் துறை இணையதளத்தில் (http://dgeapp.tnschools.gov.in) மாணவர்களின் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அதில், மாணவர்கள் விவரங்கள் சரியாக இருக்கிறதா என்பதை உறுதிசெய்து பின்னர் அவற்றை விநியோகம் செய்ய வேண்டும்.

அதேநேரம் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் தனித்தேர்வர்கள் அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் பங்கேற்க ஏதுவாக, அவர்களுக்கு மட்டும் முன்கூட்டியே கடந்த பிப்.25-ஆம் தேதியே தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திய அறிவியல் கல்வி, ஆராய்ச்சி நிறுவன நுழைவுத் தேர்வு

பிளஸ் 2 மாணவர்கள் நாளைமுதல் விண்ணப்பிக்கலாம்

கோவை, மார்ச் 3: இந்திய அறிவியல் கல்வி, ஆராய்ச்சி நிறுவனத்தின் (IISER) நுழைவுத் தேர்வுக்கு மார்ச் 5-ஆம் தேதி (வியாழக்கிழமை) முதல் பிளஸ் 2 மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவியல் கல்வி, ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்குவதற்காக நாட்டின் 7 இடங்களில் (பெர்ஹாம்பூர், போபால், கொல்கத்தா, மொஹாலி, புணே, திருவனந்தபுரம், திருப்பதி) ஐஐஎஸ்இஆர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. 5 ஆண்டு பிஎஸ்எம்எஸ், 4 ஆண்டு பிஎஸ், பிடெக் படிப்புகளை வழங்கும் இந்த நிறுவனங்களில் சேருவதற்கு பிரத்யேக நுழைவுத் தேர்வு (ஐஏடி) எழுத வேண்டும்.

பிளஸ் 2 முடித்தவர்கள், பிளஸ் 2 தேர்வு எழுதும் மாணவர்கள், உயிரியல், வேதியியல், கணிதம், இயற்பியல் ஆகியவற்றில் குறைந்தது 3 பாடங்களைப் படித்திருப்பவர்கள் இந்தத் தேர்வு எழுதத் தகுதியானவர்கள். நுழைவுத் தேர்வு ஜூன் 7-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது. தேர்வுக்கு மார்ச் 5-ஆம் தேதி முதல் இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

ஏப்.13-ஆம் தேதி விண்ணப்பிக்க கடைசி நாளாகும். தேர்வுக்கான ஹால் டிக்கெட் மே 24-இல் வெளியிடப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு https://www.iiseradmission.in/ என்ற இணையதளத்தைக் காணலாம்.

பிளஸ் 1 அரியர் தேர்வு: 3,576 பேர் பங்கேற்கவில்லை

சென்னை, மார்ச் 3: பிளஸ் 1 அரியர் மாணவர்களுக்கான தேர்வு செவ்வாய்க்கிழமை தொடங்கிய நிலையில், தமிழ் உள்ளிட்ட மொழிப் பாடங்களுக்கான தேர்வில் 3,576 மாணவர்கள் பங்கேற்கவில்லை என அரசுத் தேர்வுகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 2018-ஆம் ஆண்டு முதல் பிளஸ் 1 வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்தப்பட்டு வந்தது. மாணவர்களுக்கான அழுத்தத்தைக் குறைக்கும் விதமான அந்தத் தேர்வு நிகழாண்டு முதல் ரத்து செய்யப்பட்டது. எனினும், முந்தைய ஆண்டுகளில் பிளஸ் 1 பொதுத்தேர்வில் தோல்வியடைந்த மாணவர்கள் அந்தப் பாடங்களை அரியர் தேர்வாக எழுத வேண்டுமென தேர்வுத் துறை அறிவித்தது. அதன்படி நிகழாண்டு பிளஸ் 1 அரியர் தேர்வெழுத பள்ளி மாணவர்கள் 19,107 மற்றும் தனித்தேர்வர்கள் 5,944 என 25,051 பேர் விண்ணப்பித்தனர்.

இந்த நிலையில், பிளஸ் 1 அரியர் பொதுத் தேர்வு செவ்வாய்க்கிழமை தொடங்கியது. முதல்நாள் தமிழ் உள்பட மொழிப் பாடங்களுக்கான தேர்வுகள் நடைபெற்றன. இந்தத் தேர்வெழுத மொத்தம் 8,752 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதில் 5,176 மாணவர்கள் மட்டுமே தேர்வில் கலந்துகொண்டனர்.

மேலும், 3,576 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. இதில் தமிழ் வினாத்தாள் சற்று கடினமாக இருந்ததாக தேர்வர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து பிளஸ் 1 அரியர் தேர்வு மார்ச் 27-ஆம் தேதி வரை நடத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

14 மாவட்டங்களில் பறவைக் காய்ச்சல்: தமிழக சுகாதாரத் துறை எச்சரிக்கை

சென்னை, மார்ச் 3: தமிழகத்தில் 14 மாவட்டங்களில் காகங்கள் இடையே மட்டுமே பறவைக் காய்ச்சல் பரவியிருந்தாலும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை வலியுறுத்தியுள்ளது.

சென்னை அடையாறில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், 'ஹெச்5 என்1' எனப்படும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது அண்மையில் கண்டறியப்பட்டது. இதையடுத்து, கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமைச் செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது.

அதனடிப்படையில் மாநில சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பறவைக் காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவும். மேலும், பாதிக்கப்பட்ட பறவையிடமிருந்தோ, மனிதரிடமிருந்தோ மற்றவர்களுக்கு, 'வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை நாடுமாறு பொது சுகாதாரத் துறை தெரிவித்திருந்தது.

இதனிடையே, சென்னையைத் தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் காகங்கள் உயிரிழந்து வருகின்றன. இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் பறவை காய்ச்சலால் காகங்கள் உயிரிழந்தாலும், மற்ற பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பாதிப்பு கண்டறியப்படவில்லை. அதேவேளையில், காகங்கள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். உயிரிழக்கும் பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக்கூடாது. அதேபோன்று அறிகுறிகள் இருந்தால், அலட்சியம் காட்டாமல் மருத்துவரை அணுக வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

திருச்செந்தூர் கோயிலுக்கு புதிய அறங்காவலர் குழுவை நியமிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

மதுரை, மார்ச் 3: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு புதிய அறங்காவலர் குழுவை நியமிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

திருச்செந்தூரைச் சேர்ந்த பி. ராம்குமார் ஆதித்தன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் தக்காராக அருள்முருகன் செயல்பட்டுவருகிறார். தனிநபர் தக்காராக செயல்படுவது இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளுக்கு எதிரானது. அறங்காவலர் குழுவில் ஒரு பெண், ஒரு பட்டியலினத்தவர் இடம் பெற வேண்டும் என்கிற விதிமுறை உள்ளது.

இந்தக் கோயிலுக்கு புதிய அறங்காவலர் குழுவை நியமனம் செய்ய வேண்டும் என ஏற்கெனவே சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டது. ஆனால், நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து பல மாதங்களாகியும் இதுவரை அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படவில்லை.

தற்போது, கோயிலில் பூஜை பொருள்கள் விற்பனை செய்ய 70 கடைகளுக்கு அண்மையில் ஏலம் விடப்பட்டது. இதில், இந்து சமய அறநிலையத் துறையின் விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை. தற்போதைய ஏல அறிவிப்பில் மிகக் குறைவான அடிப்படை வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

எனவே, ஏல விதிகளை முறையாகப் பின்பற்றாமல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு தடை விதிக்க வேண்டும். புதிய அறங்காவலர் குழுவை உடனடியாக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் என். சதீஷ்குமார், எம். ஜோதிராமன் அமர்வு முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் வீராகதிரவன் முன்னிலையாகி, கோயில் கடைகளுக்கான ஏலம் ரத்து செய்யப்பட்டது. மேலும், அறங்காவலர் பதவிக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வந்துள்ளது என்றார்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி நான்கு மாதங்களுக்குள் புதிய அறங்காவலர் குழுவை நியமிக்க வேண்டும். இது குறித்த விளம்பரத்தை தமிழ் நாளிதழில் வெளியிட வேண்டும். கோயில் இணையதளத்திலும் வெளியிட வேண்டும். இந்த வழக்கு முடித்துவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரு நாள்களுக்கு பனிமூட்டம்

சென்னை, மார்ச் 3: தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் புதன் மற்றும் வியாழக்கிழமை (மார்ச் 4, 5) மிதமான பனிமூட்டம் இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும், மத்திய வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்திய பெருங்கடலின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் புதன்கிழமை (மார்ச் 4) முதல் வெள்ளிக்கிழமை (மார்ச் 6) வரை பொதுவாக வறண்ட வானிலை நிலவக் கூடும்.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மார்ச் 7 முதல் 9-ஆம் தேதி வரை லேசான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் புதன்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

பனிமூட்டம்: மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் புதன் மற்றும் வியாழக்கிழமை அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

HOUSING FINANCE BAJAJ
பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டடம், 5வது தளம், கல்யாணி நகர், புணே, மகாராஷ்டிரா-411014.
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட., தரைத்தளம், Chateaud Ampa, எண். 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 600029. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: Rathish.ramachandran@bajajhousing.co.in, அலைபேசி எண்: 9940155459 & 8778385461
பிற்சேர்க்கை-IV-A [விதி 8(6)] அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் - ஏல விற்பனை அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இதனுடன் தொடர்புள்ள கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 விதி 8(6)இன் வரத்துகளின்கீழ் இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடுபெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டதும் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஈடுபெற்றுக் கடனளித்தவர்) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ளது எள்ளவோ அது", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு விற்பனை செய்யப்பட உள்ளது. விபரங்கள் பின்வருமாறு.
கடன்தாரர் / சுகட்டுக் கடன்தாரர் மற்றும் கடன் விபரங்கள்
கடன் கணக்கு எண்: H403HLT0092397, H403HLT0092396, H403HHL0086995 &
1. P கார்த்திகேயன் (கடன்தாரர்) புதிய எண். 1, பழைய எண். 26, JRK கன்ஸ்ட்ரக்ஷன், F2, 1வது தளம், 4வது கண்ணதாசன் தெரு, நெசப்பாக்கம், நெல்லை ஸ்டோர் அருகில், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600078. 2. சிந்தாலேகா K (சுகட்டு கடன்தாரர்), புதிய எண். 1, பழைய எண். 26, JRK கன்ஸ்ட்ரக்ஷன், F2, 1வது தளம், 4வது கண்ணதாசன் தெரு, நெசப்பாக்கம், நெல்லை ஸ்டோர் அருகில், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600078.
மொத்த நிலுவைத் தொகை: 26/02/2026 அன்றுள்ளபடி ரூ.27,43,886/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு மட்டும்) இதனுடன் சேர்த்து 26/02/2026 முதல் கணக்கிடப்படும் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள்
1. மின்-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும
1) மின்-ஏல நாள்:- 07.04.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:- 06.04.2026 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரம்). 3) சொத்து ஆய்வு நாள்: 05.03.2026 முதல் 06.04.2026 வரை முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரம்)
1. குறைந்தபட்ச கேட்பு விலை 2. சொத்துக்கான டேவணித்தொகை 3. ஏல உயர்வுத்தொகை
1) அசையாச் சொத்துக்கான குறைந்தபட்ச கேட்பு விலை:- ரூ.29,25,000/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து இருபத்தைந்து ஆயிரம் மட்டும்), 2) டேவணித்தொகை [EMD]:- ரூ.2,92,500/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூற்று இரண்டு ஆயிரத்து ஐந்நூறு மட்டும்), 3) ஏல உயர்வுத்தொகை:- ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) & அதன் மடங்குகளில்.
அசையாச் சொத்து விவரம்: சொத்து அட்டவணை: அட்டவணை "A" அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 1087 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தில் அடங்கிய 192 சதுர அடி பிரிக்கப்படா பங்கு பரப்பளவு கொண்ட நிலம் இதனுடன் ஒரு ஃபிளாட். இது அமைவிடம்: முதல் தளம், ஃப்ளாட் எண். F-2, 450 சதுர அடி மேல் கட்டுமானப் பரப்பளவு, இதன் ப்ளாட் எண். 1, பழைய கதவு எண். 1, புதிய கதவு எண். 26, ஜனனி அவென்யூ, நெசப்பாக்கம், சென்னை-600078. அமையப்பெற்ற சர்வே எண். 86, நெசப்பாக்கம் கிராமம், மாம்பலம் கிண்டி வட்டம், சென்னை மாவட்டம் எல்லைகளாவன : கிழக்கு : திரு ராஜூவுக்கு சொந்தமான நிலம், மேற்கு : ராஜகோபாலுக்கு சொந்தமான நிலம், வடக்கு : காலி நிலம், தெற்கு : ப்ளாட் எண். 2 மற்றும் 12 அடி சாலை.
பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:
● கடனீட்டுச் சொத்து குறைந்தபட்ச கேட்பு விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. ● ஏல விற்பனையானது மின் ஏல வலைத்தளம் மூலம் இணையவழியில் நடத்தப்படும். ● இந்த மின்-ஏலம் https://bankauctions.in எனும் இணையத்தளத்தில் 07.04.2026 அன்று முற்பகல் 11:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணி வரை எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன் நடத்தப்படும். ● நிறுவனத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறிய பார்க்க வேண்டிய இணையத்தளம்: https://www.bajajhousingfinance.in/auction-notices அல்லது மேலும் விவரங்கள் பெற தயவு செய்து அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.
நாள்: 04.03.2026 இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர் (ரதீஷ் ராமச்சந்திரன்) பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

HOUSING FINANCE BAJAJ
பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டடம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புணே, மகாராஷ்டிரா - 411014.
கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட., தரைத்தளம், Chateaud Ampa, எண் 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 600029, அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: Rathish.ramachandran@bajajhousing.co.in, அலைபேசி எண்: 9940155459 & 8778385461
பிற்சேர்க்கை IV-A [விதி 8(6)] அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் - ஏல விற்பனை அறிவிப்பு - கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இதனுடன் தொடர்புள்ள கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 விதி 8(6)இன் வரத்துகளின்கீழ் இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடுபெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டதும் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஈடுபெற்றுக் கடனளித்தவர்) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ளது எள்ளவோ அது", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு விற்பனை செய்யப்பட உள்ளது. விபரங்கள் பின்வருமாறு.
கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் மற்றும் கடன் விபரங்கள்
கடன் கணக்கு எண்: 403HML60174882 1. சுரேஷ்குமார் செல்வராஜ், (கடன்தாரர்) 2. அனிதா S (கூட்டுக் கடன்தாரர்) முகவரி 5/211 கணேஷ் நகர் பிரதான சாலை மாடம்பாக்கம் சென்னை-600126. 3. அனி எண்டர்ப்ரைசஸ் (கூட்டுக் கடன்தாரர்) முகவரி கதவு எண் 14a 2வது பிரதான சாலை சீதாபதி நகர் சிட்லபாக்கம் சென்னை-600126.
மொத்த நிலுவைத் தொகை: 28/02/2026 அன்றுள்ளபடி ரூ.35,84,912/- (ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து எண்பத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து பன்னிரண்டு மட்டும்) இதனுடன் சேர்த்து 28/02/2026 முதல் கணக்கிடப்படும் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள்
1. மின்-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும
1) மின்-ஏல நாள்:- 08.04.2026 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:- 07.04.2026 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரம்). 3) சொத்து ஆய்வு நாள்: 05.03.2026 முதல் 07.04.2026 வரை முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரம்)
1. குறைந்தபட்ச கேட்பு விலை 2. சொத்துக்கான டேவணித்தொகை [EMD] 3. ஏல உயர்வுத்தொகை
1. அசையாச் சொத்துக்கான குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.30,35,000/- (ரூபாய் முப்பது லட்சத்து முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) 2. டேவணித்தொகை [EMD]:- ரூ.3,03,500/- (ரூபாய் மூன்று லட்சத்து மூவாயிரத்து ஐந்நூறு மட்டும்), 3. ஏல உயர்வுத்தொகை:- ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) & அதன் மடங்குகளில்.
அசையாச் சொத்து விவரம்: சொத்து அட்டவணை: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட விவசாயமற்ற சொத்து விபரம்: 940 சதுர அடி பரப்பளவு கொண்ட ஃபிளாட் எண். F1, கட்டுமானப் பரப்பளவு மேலே மூடப்பட்ட கார் நிறுத்துமிடத்துடன்கூடிய பொதுப் பகுதியை உள்ளடக்கியதாகும். இதனுடன் 1950 சதுர அடியில் அடங்கிய 600 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு. அமைவிடம்: பிளாட் எண்.11 இல், காந்தி நகர், அமையப்பெற்ற சர்வே எண்.10/3A மற்றும் புதிய சர்வே எண்.10/10 புதூர் கிராமத்தில் அமைந்துள்ளது. கிழக்கு: காலி நிலம், மேற்கு: பிளாட் எண்.10, வடக்கு: 20 அடி சாலை, தெற்கு: பிளாட் எண்.14. இச்சொத்து தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார் பதிவு மாவட்டத்துக்குள் அமைந்துள்ளது.
பொது ஏலத்தின் விதிமுறைகள்